செய்தி வெளியீடு எண்:145 நாள் : 01.03.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.3.2016) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் "இல்லந்தோறும் இணையம்'' திட்டம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் சென்னை–தரமணி, டைடல் பார்க் வளாகத்தில் 3 கோடியே 53 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழில்முனைவோர் மையம், மேகக்கணினி சார்ந்த சேவைகள் மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள், 10 கோடியே 41 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மேகக்கணினிய அமைப்பு ஆகியவற்றை துவக்கி வைத்து, 93 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பேரிடர் மீட்பு மையம் மற்றும் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் இரண்டாம் கட்ட செயல்பாடு ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

''அரசு கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக மாநிலம் முழுவதும் அதிவேக அகண்ட அலைவரிசை சேவைகள் (Broadband Services) மற்றும் இதர இணைய சேவைகள் (Internet Services) குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும்''– என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் "இல்லந்தோறும் இணையம்'' திட்டம்;

தமிழக அரசின் தொலைநோக்கு திட்ட அறிக்கை 2023ல் குறிப்பிட்டபடி, மாநிலத்தில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அமைந்துள்ள மனித ஆற்றலை பயன்படுத்தி புதிய முயற்சிகளை ஊக்குவித்திடும் வகையில் சென்னை – தரமணி, டைடல் பார்க் வளாகத்தில் 3 கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழில்முனைவோர் மையம் (Startup Warehouse);

மாணாக்கர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களுக்காக மேகக்கணினி சார்ந்த சேவைகள் மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள் ஆகியவற்றை குறைந்த கட்டணத்தில் வழங்கும் திட்டம்;

சென்னை, பெருங்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் தகவல் தொழில்நுட்ப மற்றும் கணினி உள்கட்டமைப்பினை சிறப்புற பயன்படுத்தி பல்வேறு துறைகளின் கணினி பயன்பாடுகளை ஏற்றம் செய்யும் பொருட்டு 10 கோடியே 41 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மேகக்கணினிய அமைப்பு;

என மொத்தம் 13 கோடியே 94 லட்சம் ரூபாய் செலவிலான தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மேலும், திருச்சிராப்பள்ளி எல்காட் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 53 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பேரிடர் மீட்பு மையம் மற்றும் சென்னை, பெருங்குடியில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநில தரவு மையம் – இரண்டாம் கட்டம் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. முக்கூர் என். சுப்பிரமணியன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அதுல் ஆனந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 1.3.2016